**<u>2020ம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ம் தேதி திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற சிறப்பு கூட்ட பொருட்கள்</u>**

**1.** திண்டுக்கல் மாநகராட்சிக்கு சொந்தமான அடியனூத்து கிராம புல எண்கள் 582/1-5, 588/1pt, 2pt, 3pt, 553/11, 579/1-2, 580/1-2, 581, 582/1-5, 587/1,2, 586 –ல் மொத்தப்பரப்பளவு (11.82 ஏக்கர்) காலியிடத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து வழங்ககோரி நிர்வாக பொறியாளர் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் அவர்களின் கடிதம் ந.க.எண். 1906/உ.பொ (தி)/2016, நாள்- 21.09.2016-ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதின் பேரில் நகராட்சிநிர்வாக ஆணையர் அவர்கள் மூலமாக அரசு செயலாளருக்கு 10.01.2017-ம் ஆண்டு கோப்பு எண். 21570/2016/எப்1, மூலம் கருத்துரு அனுப்பப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். 2927/2018/மா.ந.அ4, நாள். 11.01.2019ம் தேதிய கடிதத்தின் மூலம் திருத்திய கருத்துரு புதிதாக அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் மதுரை அவர்களுக்கு 15.02.2019-ம் அன்று திருத்திய பிரேரணை அனுப்ப கோரி இம்மாநகராட்சியால் கோரப்பட்டது. ஆனால், குடிசைமாற்று வாரியம் தனது 02.03.2019-ம் தேதிய கடிதத்தில் முன் நுழைவு அனுமதி வழங்க கோரி மட்டுமே கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கு சந்தை மதிப்பீட்டு விபரம் வழங்க கோரி கடிதம் அனுப்பப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

மேற்படி இடம் திண்டுக்கல் நகராட்சிக்கு குடிநீர் திட்டத்திற்கு1901-ம் ஆண்டு கட்டாய நில எடுப்பு திட்டத்தின் கீழ் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு நகராட்சி பெயரில் அரசாணை எண். 4911-A 26, நாள். 17.02.1927-ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டு தற்பொழுது மாநகராட்சி கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது.

இந்நிலையில் அரசு ஆணை எண். 25, நாள். 18.02.2005-ன் படி சமத்துவபுரம் அமைக்க 09 ஏக்கர் 65 செண்ட் நில ஒப்படைப்பு செய்யப்பட்டதற்கு பின்னேற்பு வழங்கி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இடங்கள் மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ளது. உள்ளாட்சி துறை மாநகராட்சி நகராட்சி நிர்வாகத்திற்கு கட்டுப்பட்ட இடங்களை வேறு துறைக்கோ அல்லது தனிநபர்களுக்கோ வழங்கவதற்கு அரசு ஆணை எண். 730, நாள். 17.04.1976-ல் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே,நில ஆர்ஜிதம் மூலம் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு நில கிரைய தொகை மற்றும் இழப்பீடு தொகையினை மாநகராட்சிக்கு அரசு நிர்ணயம் செய்து வழங்கும் நிலையில் நகராட்சி இடங்களை பிற துறைக்கோ தனியாருக்கோ வழங்க நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.2) துறை அரசாணை (நிலை) எண். 35, நாள். 17.02.1997 மற்றும் அரசாணை (நிலை) எண். 25, நாள். 25.02.2000 இவற்றின் படி சந்தை விலை அடிப்படையில் நில மாற்றம் செய்யலாம் என அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும். மேலும், குடிசை மாற்று வாரியத்திற்கு முன் நுழைவு அனுமதி வழங்க இம்மாநகராட்சிக்கு தடை ஏதும் இல்லை.

**<u>அலுவலக குறிப்பு...</u>**

அடியனூத்து கிராமத்தில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான அடியனூத்து புல எண்கள் 582/1-5, 588/1pt, 2pt, 3pt, 553/11, 579/1-2, 580/1-2, 581, 582/1-5, 587/1,2, 586 மொத்த பரப்பளவு 11.82 ஏக்கர் இடத்தினை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம் செயல்படுத்திட கோரப்பட்டுள்ளதால் கீழ் காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கிட அரசுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மூலம் கருத்துரு அனுப்ப மாமன்றம் அனுமதிக்கலாம்.

1. அனைவருக்கும் வீடு திட்டத்தில் கட்டப்படும் வீடுகளில் மாநகராட்சி பகுதியில் நீர்நிலைப்புறம்போக்கு இடத்தில்

ஆக்கிரமிப்பு செய்து குடியிருப்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கி ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும்.

2. மாநகராட்சி முன் அனுமதி வழங்கியபின் மாநகர் பகுதியில் ஆக்கிரமிப்பில் குடியிருப்பவர்களுக்கு மட்டுமே குடியிருப்புகள் ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.
3. திடக்கழிவு மேலாண்மை மற்றும் கழிவு நீர் சுத்திகரிப்பு முதலானவை அப்பகுதிக்குள் தன்னிறைவு செய்யும் நிலையில் வடிவமைப்பு செய்து கொள்ள வேண்டும்.
4. மாநகராட்சிக்கு நிதியிழப்பு இன்றி நிலக்கிரைய தொகை சந்தை விலை அடிப்படையில் உரிய தொகை செலுத்தப்பட வேண்டும்.

---

**2.** சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண். 7/2014) 37வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015-ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் திண்டுக்கல் மாநகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை ) துணை விதிகள், 2018 கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது.

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 அத்தியாயம் 15 பிரிவு 433/ கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981 அத்தியாயம் 15 பிரிவு 432/ தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அத்தியாயம் 14 பிரிவு 306 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படியும், அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டும், மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுங்குப்படுத்தவும், திண்டுக்கல் மாநகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 ஏற்படுத்தப்படுகின்றது.

## அத்தியாயம் -1

## முதனிலை

1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் – இந்த துணை விதிகள் திண்டுக்கல் மாநகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை ) துணை விதிகள், 2018 என்றழைக்கப்படும்.

(2) இந்த துணை விதிகளானது வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்

2. பொருள் வரையறைகள் .- இந்த துணை விதிகளில், உபயோகப்படும் வார்த்தைகளுக்கான பொருள் வரையறை

(i) '' சட்டம்" என்பது சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம் 2014 (மத்திய சட்டம் எண். 7/2014) என்று பொருள்படும்.

(ii) "விற்பனை திட்டம் '' என்பது சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விற்பனை திட்ட வரைபடம் என்று பொருள்படும்.

(iii) ''விதிகள்" என்பது தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 என்று பொருள்படும்.

(iv) ''திட்டம்" என்பது சட்டத்தின் 38வது பிரிவின் கீழ் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015 என்று பொருள்படும்.

(v) '' நகர விற்பனைக்குழு" என்பது விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகர விற்பனைக்குழு என்று பொருள்படும்.

சட்டம் விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளும், வெளிபாடுகளும் இந்த துணை விதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் கொண்டுள்ள அதே பொருள்படும்.

## அத்தியாயம் -2

## விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுங்கு முறைகள்

**3.(1)** பாத சாரிகளின் நடமாட்டம் (Foot fall) மற்றும் சாலையின் அகலம், வாகனம், மற்றும் பாதசாரிகளுக்கான சீரான இயக்கம் ஆகியவற்றின் தன்மையை கருத்தில் கொண்டு விற்பனை மண்டலங்களை நகர விற்பனைக்குழு முடிவு செய்யும்.

(2) ஒரு இடத்தின் கொள்திறனுக்கேற்ப சாலையோர வியாபாரிகளின் எண்ணிக்கை வரையறுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர விற்பனைக்குழுவால் நிர்ணயிக்கப்பட்டவாறு நடமாடும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை வரம்பை மீறாமல் இருப்பது குறித்து திண்டுக்கல் மாநகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் சரிப்பார்க்கப்பட வேண்டும்.

(3) சாலையின் அகலத்தைக்கொண்டும், சாலை விவரிப்பு குறித்தான கீழ்க்காணும் விபரங்களைக்கொண்டும் இத்திட்டத்தில் கட்டுப்படுத்தப்பட்ட விற்பனை மண்டலங்களை விவரிக்கப்பட வேண்டும்.

(i) இரு வழி போக்குவரத்து கொண்ட 6 மீட்டர் அகலம் கொண்ட சிறிய சாலைகளில் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டது. இருப்பினும், அத்தகைய சாலைகளில் எந்தவித நேரத்திலும் வாகனங்கள் அனுமதிக்கப்படாத சாலையாக அறிவிக்கப்பட்டால், அச்சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(ii) 3 மீட்டர் முதல் 5மீட்டர் வரை அகலமான சிறிய சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டது. இருப்பினும், அத்தகைய சாலைகள் ஒரு வழி வாகன சாலை என அறிவிக்கப்பட்டிருந்தால், சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iii) 5 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை அகலமான சாலைகளில், சாலையின் ஒரு புறத்தில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iv) 10 மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலமான பெரிய சாலைகளில், சாலையின் இருபுறமும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(v) ஒரு சாலையில் விற்பனை அனுமதிக்கப்பட்ட இடத்தில் அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

(vi) சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பட வேண்டும்.

(vii) வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தான், சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதக்கப்பட வேண்டும்.

(viii) சாலை வடிவமைப்பு குறித்தான அறிவுரைகள், இந்த துணை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(4) சாலையோர விற்பனை தடைச்செய்யப்பட்ட மண்டலங்கள்,

(i) அரசு கட்டிடங்கள், உயர்நீதிமன்றம், பிற நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், மாவட்ட ஊராட்சி/ மாநகராட்சி அலுவலகங்கள், தீயணைப்பு நிலையங்கள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கும்,

(ii) இரயில் நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

(iii) நகர எல்லைக்குட்பட்ட இரயில் கடவுப்பாதையின் இரு பக்கங்களிலும் 30 மீட்டர் நீளத்திற்கும்,

(iv) பேருந்து நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 50 மீட்டர் நீளத்திற்கு,

(v) பண்டைய நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் தளங்கள் மற்றும் அகழ்வுகள் சட்டம் 2010-ன் கீழ் அறிவிக்கப்பட்ட இடங்களில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.

(vi) மரபுரிமை சொத்து காப்பு விதிகளில் தடை செய்யப்பட்ட பகுதிகள்

(vii) இரண்டு அல்லது அதிகமான சாலைகள் சந்திக்கும் இடங்களில் அனைத்து பக்கங்களில் 10 மீட்டர் நீளத்திற்கு

(viii) எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 30 மீட்டர் நீளத்திற்கு

(ix) பாதுகாப்பு கோணத்தில் தடை செய்யப்பட்ட எந்த பகுதியிலும்

(x) நகர விற்பனைக்குழுவின் ஒப்புதல் பெற்று நகரின் எந்த ஒரு பகுதியிலும் சாலையோர விற்பனை தடை செய்வது குறித்து உள்ளாட்சி அமைப்பு முடிவு செய்து, அத்தகைய இடங்களில் சாலையோர விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

**குறிப்பு -** கணக்கெடுப்பின் போது அறியப்பட்ட எந்தஒரு அங்காடியையோ அல்லது இயற்கையாக அமைப்பு பெற்ற அங்காடியையோ, விற்பனை தடை செய்யப்பட்ட பகுதியில் இணைக்கக்கூடாது.

**4.சாலையோர விற்பனையாளர்களுக்கான கட்டுப்பாடு** – எந்த ஒரு விற்பனை செய்ய சான்று பெற்ற சாலையோர விற்பனையாளர்கள்;

(i) வாகன போக்குவரத்து, மிதிவண்டி மற்றும் பாதசாரி நடமாட்டத்திற்கு தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது.

(ii) கதவு, நுழைவு வாயில், தீயணைப்பு கதவுகள் அல்லது அவசரகால வெளியேறும் பாதை ஆகியவற்றிற்கு முட்டுகொடுத்து தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது.

(iii) குடிநீர் வழங்கல், கழிவுநீர், தொலைபேசி, மின்சாரம் அல்லது இதே மாதிரியான அமைப்புகள் போன்ற எந்தவொரு பயன்பாட்டிற்கு தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது.

(iv) சாலையில் அல்லது அதன் பக்கத்தில் உள்ள எந்த கட்டமைப்புகளுக்கோ, வழிகாட்டு பலகைகள், அறிவிப்பு பலகைகள், நகர வேலைகள் அல்லது நடவடிக்கைகளுக்கோ தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது.

(v) ஆட்சேபனைக்குரிய சேவைகளையோ அல்லது பொருட்களையோ விற்பனை செய்வதோ கூடாது.

(vi) நகர விற்பனைக்குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது.

(vii) நகர விற்பனைக்குழுவால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் சேவைகளையோ அல்லது பொருட்களை வணிகம் செய்வதோ கூடாது.

(viii)உள்ளாட்சி அமைப்பால் அடையாளம் காணப்பட்ட இடங்களை தவிர, இதர இடங்களில் திடக்கழிவுகளை கொட்டக்கூடாது.

(ix) விற்பனை சான்றிதழ் காலாவதியாகிய பின்னர் பொருட்களையோ அல்லது சேவைகளையோ அல்லது விற்பனையோ செய்யக்கூடாது.

(x) ஒலி பெருக்கிகள், மெகா போன்கள், ஒலி அமைப்புகள் அல்லது பிற ஒலி பெருக்கி உபகாரணங்கள் மற்றும் பிரதிபலிப்பு விளம்பரங்கள் ஆகியவற்றினை பயன்படுத்தக்கூடாது.

5. சாலையோர வியாபாரிகளின் பொறுப்பு – சாலையோர வியாபாரிகள் அல்லது அவரது குடும்ப உறுப்பினர்கள் அல்லது பணியாளரின் கடமைகள்.

(i) விற்பனை சான்றிதழில் குறிப்பிட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட வேண்டும்.

(ii) விற்பனை செய்யும் இடத்தில் விற்பனை சான்றிதழ் காட்சிக்கு எப்பொழுதும் வைக்கப்படவேண்டும்.

(iii) விற்பனை செய்யும் இடத்தில் மட்டும் விற்பனை செய்ய வேண்டும்.

(iv) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையோர விற்பனையாளர் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் அல்லது அவரின் பணியாளர் விற்பனை இடத்தில் விற்பனை செய்யும் போது இருக்க வேண்டும்.

(v) எப்பொழுதும் விற்பனை இடத்தினை பாதுகாப்பாகவும், நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும்.

(vi) உள்ளாட்சி அமைப்பின் தேவைக்கேற்ப பாதுகாப்பு மற்றும் சுகாதார விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்.

(vii) உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம் 1954 அல்லது இதர விதிகளை கடைப்பிடிக்க வேண்டும்

(viii) நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016-ஐ கடைபிடிக்க வேண்டும்.

(ix) நெகிழி கழிவு மேலாண்மை விதிகள், 2016-ஐ கடைபிடிக்க வேண்டும்.

(x) தகுதியுடைய அலுவலர் கோரும் போது விற்பனை சான்றிதழ் காண்பிக்க வேண்டும்.

(xi) இந்த துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிகளையும் பின்பற்ற வேண்டும்.

## அத்தியாயம் – 3
## கட்டணங்கள், வரிகள் மற்றும் அபராதங்கள்

**6. விற்பனை கட்டணம் –** (1) சாலையோர வியாபாரிகள் உள்ளாட்சி அமைப்பிற்கு விற்பனை கட்டணம் செலுத்த வேண்டும்.

(2) உபவிதி (1)-ன் படியான விற்பனை கட்டணம் கீழ்க்காணும் பட்டியலின் படியாகும்.

| வ. எண். | சாலையோர விற்பனையாளரின் வகை | பரப்பளவு | விற்பனை கட்டணம் |
|---|---|---|---|
| 1. | நிலையான விற்பனையாளர் (முழுநேரம்) | 10 சதுர அடிகள் | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ. 750/- க்கு குறையாமல் |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 2 சதவீதம் – வருடத்திற்கு ரூ.1500/- க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வழிகாட்டி மதிப்பில் 3 சதவீதம் – வருடத்திற்கு ரூ. [illegible] க்கு |
| 2. | நிலையான விற்பனையாளர் (பகுதிநேரம் அல்லது நேர பகிர்வு) | 10 சதுர அடிகள் | வழிகாட்டி மதிப்பில் 0.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ. 375/- க்கு குறையாமல் |

| | | | |
|---|---|---|---|
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வழிகாட்டி மதிப்பில் 1 சதவீதம் – வருடத்திற்கு ரூ.750/- க்கு குறையாமல் |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வழிகாட்டி மதிப்பில் 1.5 சதவீதம் – வருடத்திற்கு ரூ. 1500/- க்கு குறையாமல் |
| 3. | நடமாடும் விற்பனையாளர் ( மோட்டார் பொருத்தப்பட்ட வண்டியுடன் | 10 சதுர அடிகள் | வருடத்திற்கு ரூ. 750/- |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ. 1500/- |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வருடத்திற்கு ரூ. 3000/- |
| 4. | நடமாடும் விற்பனையாளர் (மோட்டர் பொருத்தப்படாத வண்டியுடன்) | 10 சதுர அடிகள் | வருடத்திற்கு ரூ. 375/- |
| | | 10 முதல் 25 சதுர அடிகள் வரை | வருடத்திற்கு ரூ. 750/- |
| | | 25 சதுர அடிகளுக்கு மேல் | வருடத்திற்கு ரூ. 1500/- |
| 5 | நடமாடும் விற்பனையாளர் (தலைசுமை) | - | வருடத்திற்கு ரூ. 250/- |

(3) மூன்று வருடங்களுக்கு ஒருமுறை விற்பனை கட்டணம் திருத்தியமைக்கப்பட்டு , உள்ளாட்சி அமைப்பின் விளம்பர பலகையில் அறிவிப்பு வெளியிடப்பட வேண்டும்.

7. பராமரிப்பு கட்டணம் – (1) சாலையோர விற்பனையாளரின் வகை மற்றும் அங்காடியின் தகுதியின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்பால் செய்யப்பட்டுள்ள குடிமை நலன்கள் மற்றும் வசதிகளுக்கான மாதாந்திர பராமரிப்பு கட்டணம் செலுத்தப்பட வேண்டும். சாலையோர விற்பனையாளர்கள் மற்றும் அங்காடி வகைகள் நகர விற்பனைக்குழுவால் நிர்ணயிக்கப்படும்.

(2) உபவிதி (1)-யில் குறிப்பிடப்பட்டுள்ள பராமரிப்பு கட்டணம் கடை ஒன்றிற்கு மாதத்திற்கு ரூ. 200 வீதம் ஆண்டிற்கு ரூ. 2400 செலுத்தப்பட வேண்டும்.

(3) பராமரிப்பு கட்டணம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் ........ (10 சதவீதம்) ........ சதவீதம் உயர்த்தப்பட வேண்டும்.

( (*) மாநகராட்சி / நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை துணை விதிகளின் படி முடிவு செய்யப்பட வேண்டும்)

8. அபராதம் விதித்தல் , - எந்தவொரு சாலையோர விற்பனையாளரும்.

(i) விற்பனை சான்றிதழ்படி, மாற்று இடத்திற்கு செல்ல அல்லது காலி செய்ய தவறும்பட்சத்தில் அல்லது

(ii) விற்பனை சான்றிதழ் இல்லாமல் விற்பனை செயலில் ஈடுபட்டாலோ, விற்பனை சான்று மற்றும் சாலையோர வியாபாரம்

ஒழுங்குமுறை சட்ட பிரிவுகள் மற்றும் அவற்றின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் திட்டத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறும்போது,
மாதாந்திர கட்டணத்தில் (மூன்று) மடங்காக அபராதம் செலுத்தப்பட வேண்டும்.

(2) விற்பனை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை சாலையோர விற்பனையாளர் மூன்று முறைகள் மீறினால் அவரின் விற்பனை சான்று இடைநீக்கம் செய்யப்படும். நான்காவது முறையாக விதிமுறைகளை மீறனால் அவரின் விற்பனை சான்று ரத்து செய்யப்படும்.

## அத்தியாயம் – 4
## பலவகை

**9. விற்பனை மண்டலத்தில் போக்குவரத்தினை ஒழுங்குமுறை படுத்துதல் –** (1) நகர விற்பனை குழுவால் அறிவிக்கப்பட்ட விற்பனை மண்டலங்களில், ஒரு வழி வாகன போக்குவரத்து, வேக கட்டுப்பாடு, வாகன நிறுத்தம், கனரக வாகனங்கள் இயக்கம் மற்றும் இது குறித்த இதர பொருள்கள் குறித்து போக்குவரத்து காவல்துறையால் முடிவு செய்யப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் விற்பனை மண்டலம் அமைப்பது குறித்து போக்குவரத்து காவல்துறையால் அங்கீகரிக்கப்படவில்லையெனில், அந்த விற்பனை மண்டலத்தினை மாற்றியமைப்பது குறித்தோ அல்லது விற்பனை மண்டலத்தினை ரத்து செய்வது குறித்தோ நகர விற்பனைக்குழு பரிசீலனை செய்ய வேண்டும்.

(2) விற்பனை மண்டலத்தில், விற்பனை பகுதி, நடைபாதை மற்றும் வண்டி பாதை ஆகியவற்றினை உள்ளாட்சி அமைப்பால் தெளிவாக தெளிவுப்படுத்த வேண்டும்.

**10. விற்பனை மண்டலத்தில் பொது மக்களுக்கு வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் தரத்தினை ஒழுங்குப்படுத்துதல் -** எந்த ஒரு விற்பனையாளரும், தயார் செய்யப்பட்ட அல்லது அந்த இடத்தில் தயாரித்து விற்பனை செய்யும் உணவு பொருட்கள் குறித்து உணவு மாசுபடுதல் தடுப்புச் சட்டம், 1954-ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும். தவறும்பட்சத்தில், மேற்படி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகாரம் பெற்ற அலுவலரால் தண்டனைக்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் மற்றும் தகுதிவாய்ந்த நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட வேண்டும். நகர விற்பனைக் குழுவால் அந்த சாலையோர வியாபாரியின் விற்பனை சான்றினை உடனடியாக ரத்து செய்யப்பட வேண்டும்.

**11. விற்பனை மண்டலங்களில் குடிமை சேவைகளை ஒழுங்குப்படுத்துதல் –**

(1) விற்பனை மண்டலங்களில், பொது கழிப்பிடம் மற்றும் குடிநீர் வசதிகளை உள்ளாட்சி அமைப்பால் ஏற்படுத்த வேண்டும்.

(2) உள்ளாட்சி அமைப்பால் திடக்கழிவுகளை சரியான முறையில் சேகரிக்கப்பட வேண்டும்.

(3) சாலையோர வியாபாரிகள் தனிநபர் தேவைக்கு மின் செரிவூட்டும் சாதனம் (Rechargable Lamps) அல்லது சுயமாக மின் உற்பத்தி செய்யும் சாதனங்கள் உபயோகபடுத்தல் வேண்டும்.

(4) விற்பனை மண்டலங்களில் தனிநபர் மின்சார இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு வழங்க கூடாது.

(5) மின்சார கம்பங்களிலிருந்து முறையற்ற மின் உபயோகத்தை தடுக்கப்படும். (ந.க.எண். 6957/2018/எப்1)

**அலுவலக குறிப்பு..**

அரசால் தெரிவிக்கப்பட்ட பொது விதிகளையும், துணை விதிகளையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**3.** திண்டுக்கல் மாநகராட்சி தூய்மை இந்தியா இயக்கம் திடக்கழிவு மேலாண்மை திட்டப் பணிகளின் கீழ் உயிரி அகழ்வு முறையில் (Bio Mining) பழனி சாலை முருகபவனம் உரக்கிடங்கில் உள்ள 2,00,000 க.மீ குப்பைகளை அகற்றும் பணிக்கு 2.12.2019 ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற உள்ளது.

இப் பணியில் அரசு நிறுவனமான NIT, TRICHY நிறுவனத்தினரை மூன்றாம் நபர் தரப் பரிசோதனை மேற்கொள்ள கலந்தாலோசக நிறுவனமாக நியமிக்க கேட்டுக் கொண்டதற்கிணங்க ஷை நிறுவனத்தினர் இத் திட்டப் பணி நிலை குறித்து ஆய்வு செய்யவும், பணியின் ஒவ்வொரு நிலையிலும் திடக்கழிவுகளின் வகை, அளவு, மீட்டு எடுக்கப்பட்ட பொருட்களின் அளவு மற்றும் உயிரி அகழ்வு முறையினை திடக்கழிவு மேலாண்மை விதி 2016 ன் கீழ் மேற்கொள்ளப்படுவதை நெறிப்படுத்தவும், கலந்தோலோசக கட்டணமாக ரூ.10,00,000/- மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி 18% கட்டணமாக செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. (10,00,000/- + GST 18% ) எனவே ஷை தொகையினை இப் பணிக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 5840/ 2016/ எச் 1)

**அலுவலக குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம்

---

**4.**இம்மாநகராட்சியில் வருவாய் நிதி 2019-20ன் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள கீழ்க்காணும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூபாயில் |
|---|---|---|
| | **வருவாய் நிதி 2019-20** | |
| 1 | மேட்டுப்பட்டி மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் மராமத்து செய்யும் பணி | 600000 |
| 2 | பூச்சிநாயக்கன்பட்டியில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தைச் சுற்றி சுற்றுச் சுவர் கட்டும் பணி | 850000 |
| 3 | வார்டு எண்.8, காமராஜபுரத்தில் சிறு மின் விசை இறைப்பான் அமைத்தல் மற்றும் சிறு பாலம் அமைக்கும் பணி | 550000 |

( ந.க.எண். 11658 / 2019/ இ 4)

**அலுவலக குறிப்பு**

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்
2. மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், வேலை உத்திரவு வழங்குவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**5.** திண்டுக்கல் மாநகராட்சிக்குட்பட்ட 48 வார்டுகளில் முதற்கட்டமாக 22 வார்டுகளில் பாதாள சாக்கடை திட்டம் அமைக்கும் பணிகள் ரூ.46.15 கோடியில் மேற்கொள்ளப்பட்டு வீடுகளுக்கு இணைப்பு வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. மேலும், வீட்டின் உட்பகுதியில் பாதாள சாக்கடை கட்டமைப்பு வசதி அமைத்து இணைக்கும் பணியினை மாநகராட்சி ஒப்பந்ததாரர் மூலம் 9434 இணைப்புகள் அமைக்க மதிப்பீட்டுத் தொகை ஆகும் ரூ. 450 இலட்சத்திற்கு மாமன்றம் தீர்மானம் எண். 949, நாள். 25.01.2018 அன்று அனுமதியளிக்கப்பட்டது.

இம்மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ள மொத்த இணைப்புகளில் இதுவரை 4399 இணைப்புகள் மட்டும் ஏற்கனவே, பதிக்கப்பட்ட கழிவுநீர் குழாய்கள் மற்றும் மனித ஆய்வு குழிகள் மூலம் வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதம் 5034 இணைப்புகள் வழங்கப்பட வேண்டும். பாதாளச்சாக்கடை திட்டம் மூல மதிப்பீட்டில் வகை செய்யப்பட்ட 94 km

கழிவுநீர் குழாய்கள் மூலம் இதுவரை 13304 இணைப்புகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இணைப்புகளை வழங்க அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.450 இலட்சத்தில் இருந்து 5.278 கி.மீ. கழிவுநீர் குழாய்கள் மற்றும் 226 ஆய்வு குழிகள் 1175 இணைப்புகள் வழங்க அனுமதி கோரி தலைமைபொறியர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் அனுமதி பெற கருத்துரு தயார் செய்து அனுப்பி அனுமதி பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும், இதற்கு ஆகும் செலவீனத்தை அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு தொகைக்குள் மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.2568/2012/இ4(பா.ச.தி)**

**<u>அலுவலக குறிப்பு..</u>**

1) அனுமதிக்கலாம். நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியர் அவர்களுக்கு கருத்துரு தயார் கூடுதல் இனங்கள் பணி மேற்கொள்வதற்கு அனுமதி பெறலாம். அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு தொகைக்குள் பணி மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம்.

**2020ம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ம் தேதி திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற அவசரக் கூட்ட பொருட்கள்**

1. திண்டுக்கல் மாநகராட்சிக்குச் சொந்தமாக 1) ஆ.எம்.காலனி, 2) செல்லாண்டியம்மன்கோவில், 3) கிழக்கு மரியநாதபுரம் ஆகிய இடங்களில் சட்டமன்ற உறுப்பினர் நிதியின்கீழ் கட்டப்பட்ட சமுதாய கூடங்கள் உள்ளது.

மேற்கண்ட சமுதாய கூடங்களில் திருமணம் மற்றும் சுப நிகழ்ச்சிகள் நடத்திட கோரும் நபர்களிடம் பராமரிப்புக் கட்டணம் ரூ.500/-ம் மற்றும் மின் பயன்பாட்டு கட்டணம் யூனிட் அடிப்படையில் சேர்த்து நிகழ்ச்சிக்கு மூன்று தினங்களுக்கு முன் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திட நிபந்தனைகளாக விதித்திட மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது (ந.க.எண். /2020/அ7)..

**அலுவலகக் குறிப்பு..**

மாநகராட்சியின் நிர்வாக நலன் கருதி சமுதாய கூடங்களில் நிகழ்ச்சிகள் நடத்திட நாள் ஒன்றுக்கு பராமரிப்பு கட்டணம் ரூ.500/- நிர்ணயம் செய்திடவும், நிகழ்ச்சி நாளில் செலவாகும் மின்சாரத்திற்கான மின் பயன்பாட்டு கட்டணத்தை யூனிட் அடிப்படையில் செலுத்திட நிபந்தனைகள் பிறப்பிக்க மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

---

**2**.திண்டுக்கல் மாநகராட்சியில் குடிநீர் குழாய்கள் மற்றும் பாதாள சாக்கடை குழாய்கள் பதித்ததனால் சேதமடைந்த சாலைகளை 14வது மத்திய நிதிக் குழுத் திட்டம் 2019-2020 ன் கீழ் சீரமைக்க ரூ.10.00 கோடி மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட கீழ்க்காணும் மதிப்பீடுகளுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**14வது மத்திய நிதிக்குழுத் திட்டம் 2019-2020 குடிநீர் குழாய்கள் மற்றும் பாதாள சாக்கடை குழாய்கள் பதித்ததனால் பழுதடைந்துள்ள சாலைகளை சீரமைக்கும் பணி விபரம்**

| வ. எண் | வார்டு எண் | பணியின் பெயர் | தார் சாலை | | பேவர் கற்கள் | | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | நீளம் | அகலம் | நீளம் | அகலம் | |
| 1 | 19 | ஏஎஎம்சி சாலை, ஜேபி ஹோட்டல் சந்திப்பிலிருந்து திருச்சி சாலை சந்திப்பு வரை தார் தளம் அபிவிருத்தி செய்யும் பணி | 650.00 | 10.00 | | | 49.00 |
| 2 | 14, 19 | கோபல் நகர் விஸ்தரிப்பு மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் முகாம் அலுவலகத்திலிருந்து ஸ்கீம் சாலை சந்திப்பு வரை தார் தளம் அபிவிருத்தி செய்யும் பணி | 1076.00 | 5.00 | | | 47.00 |
| 3 | 23 | முத்தழகுபட்டி பிரதான சாலை தார் தளம் அபிவிருத்தி செய்யும் பணி | 1325.00 | 5.00 | | | 50.00 |
| 4 | 1, 2, 4, 7 | நாராயணபிள்ளைத் தோட்டம் 1வது தெரு, கே.கே.நகர், விஜயா | 600.00 | 4.00 | 800.00 | 6.00 | 50.00 |
| 5 | 8, 9, 10 | கிருஷ்ணாராவ் தெரு, கணபதி அக்ரஹாரம், கோபால சமுத்திரம் கிழக்கு சரை, துரைராஜ் நகர், லெட்சுமணபுரம் 1, 3 வது தெரு, ஈதுகா பள்ளிவாசல் தெருக்களில் தார் தளம் அபிவிருத்தி / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 1245.00 | 5.00 | 300.00 | 3.00 | 50.00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 6 | 12, 13, 14 | வீராச்சாமி நாயுடு சந்து, மருதசெட்டி தெரு, முனியப்பன் கோவில் தெரு, குமரக் கோனார் சந்து, கல்லறை தெரு, சன்னாசி சேர்வை சந்து, சிலுவத்தூர் ரோடு குறுக்கு தெருக்கள், பிள்ளையார் கோவில் தெருக்களில் தார் தளம் அபிவிருத்தி / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 320.00 | 3.00 | 1000.00 | 10.00 | 49.00 |
| 7 | 15, 16, 17 | கிழக்கு ஆரோக்கிய மாதா குறுக்குத் தெரு, குறிஞ்சி நகர், லெட்சுமி சுந்தரம் காலனி, டீச்சர்ஸ் காலனி, நாகம்மாள் கோவில் தெரு, பிள்ளையார் கோவில் தெருக்களில் தார் தளம் அபிவிருத்தி / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 600.00 | 4.00 | 800.00 | 4.00 | 50.00 |
| 8 | 16, 17, 18 | ஆரோக்கிய மாதா குறுக்குத் தெரு, சௌராஷ்டிரா காலனி, சுக்கான்மேடு, நாராயணதாஸ் நகர், ஏஆ நகர், ரவுண்ட் ரோடு தெருக்களில் தார் தளம் அபிவிருத்தி / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 810.00 | 4.00 | 400.00 | 3.00 | 49.00 |
| 9 | 16, 19 | ஸ்பென்சர் காம்பவுண்ட் குறுக்குத் தெரு, ராமசாமி காலனி, மகாஜோதி 2வது குறுக்குத் தெரு, பென்சன காம்பவுண்ட் 1, 2 தெருக்களில் தார் தளம் அபிவிருத்தி / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 1102.00 | 4.00 | 200.00 | 2.00 | 49.00 |
| 10 | 20, 22 | நன்னுபா சாகிப் சந்து, வத்தன் செட்டி தெரு, லிங்கையர் தெரு, ரேணுகா அம்மன் கோவில் தெரு, ஆர்.வி.நகர், முனியப்பன் கோவில் தெரு, ஜான்பிள்ளை தெரு, வீரபாண்டியம்மன் கோவில் | | | 1388.00 | 5.00 | 45.00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2வது தெரு, மதுரைவீரன் கோவில் தெருக்களில் பேவர் கற்கள் பதிக்கும் பணி | | | | | |
| 11 | 24, 25 | சர்தார்கான் சாகிப் சந்து, மதுரை ரோடு குறுக்கு தெருக்கள், மக்கான தெரு, பாதாள காளியம்மன் கோவில் தெரு, மூக்கனாசாரி சந்து, தரகுகார சந்து, விநாயகம் பிள்ளை தெரு, அங்குவிலாஸ் இறக்கம் 1, 2 வது தெருக்கள், ஒலியப்ப ராவுத்தர் சந்து, காந்திஜி புது ரோடு 1வது தெரு, ஜண்டா மரம் தெருக்களில் தார் தளம் அபிவிருத்தி / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 200.00 | 2.00 | 1050.00 | 5.00 | 40.00 |
| 12 | 26, 28 | வெள்ளாளர் தெரு, பாம்பாட்டி தெரு, அழகர்சாமி சந்து, வ.உ.சி. சிதம்பரனார் தெரு, ஆக்னஸ் மேரி தெரு, சின்னையாபுரம் – அங்குவிலாஸ் தெருக்களில் தார் தளம் அபிவிருத்தி / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 320.00 | 3.00 | 1000.00 | 5.00 | 48.00 |
| 13 | 29, 31 | நாகல்புதூர் 3, 5, 6 வது தெருக்கள், எழில் நகர், கனரா காலனி மற்றும் ராஜீவ் நகரில் தார் தளம் அபிவிருத்தி / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 1250.00 | 10.00 | | | 49.00 |
| 14 | 17, 29, 30 | நாகல்புதூர் 3, 4, 5 வது தெருக்கள், கக்கன் நகர், கிழக்கு ஆரோக்கிய மாதா தெருக்களில் தார் தளம் அபிவிருத்தி / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 500.00 | 4.00 | 400.00 | 3.00 | 44.00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 15 | 32, 34 | ஜான் பிரிட்டோ சந்து, கல்லறை மேடு, கிழக்குத் தெரு மற்றும்புதுத் தெரு விஸ்தரிப்புகளில் வேடபட்டி 1, 2 தெரு, பொன்வை நகர் 1, 4 தெருக்களில் தார் தளம் அபிவிருத்தி / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 600.00 | 4.00 | 400.00 | 3.00 | 37.00 |
| 16 | 34, 35 | பள்ளிவாசல் தெரு, எஸ்விகே நகர் 1, 2 வது தெரு, குயவர் 1வது தெரு, கொல்லம் பட்டறை தெரு, குருசாமி ஆசாரி தெரு, சேலாங்கேணி தெருக்களில் தார் தளம் அபிவிருத்தி / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 400.00 | 3.60 | 700.00 | 5.00 | 45.00 |
| 17 | 36, 37, 39, 40 | ஏர்வாடி ராவுத்தர் தெரு, சீனிராவுத்தர் குறுக்குத் தெரு, பால்சாமி சந்து, சிவமுருகன் காலனி 1வது தெரு, நேதாஜி நகர் 3, 6, 7 வது தெருக்கள், என்கேஎஸ் நகர் 1, 2, 3 தெருக்கள் பாவாசா தெரு, காசிமலி தெரு, எஸ்பி நகர் விஸ்தரிப்பு தெருக்களில் தார் தளம் அபிவிருத்தி / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 960.00 | 5.00 | 300.00 | 2.30 | 46.00 |
| 18 | 39, 41 | கே.பி.நகர், மதினா பள்ளிவாசல் தெரு, குயவர் 1, 2 தெருக்கள், யூசுப்பியா நகர் 1, 2, 3 தெருக்கள், கரீம் நகர், 1,2, 3 தெருக்கள் ஜின்னா நகர், பள்ளிவாசல் தெருக்களில் தார் தளம் அபிவிருத்தி / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 500.00 | 4.00 | 350.00 | 2.60 | 39.00 |
| 19 | 40, 42 | எம்டிஎஸ் காலனி, மணக்காயி அம்மன் கோவில் தெரு, மேட்டுப்பட்டி 1, 2, 3 வது தெருக்களில் தார் தளம் | 700.00 | 4.00 | 400.00 | 3.00 | 44.00 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அபிவிருத்தி / பேவர் கற்கள் பதிக்கும் பணி | | | | | |
| 20 | 43, 44, 45 | மேட்டுப்பட்டி 10வது குறுக்குத் தெரு, வேளாங்கன்னி மாதா கோவில் தெரு, கிழக்கு அசனாத்புரம், சவரியார் பாளையம் 1, 2, 3 தெருக்கள், நேருஜி நகர் குறுக்குத் தரு, சகாயமாதாபுரம், ஜீவா நகர், செபஸ்தியார் கோவில் தெருக்களில் தார் தளம் அபிவிருத்தி / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 500.00 | 3.75 | 650.00 | 3.25 | 42.50 |
| 21 | 46, 47, 48 | வேளாங்கன்னி 2, 3 குறுக்குத் தெரு, மொட்டனம்பட்டி 6, 7 | 500.00 | 4.00 | 800.00 | 5.00 | 47.50 |
| 22 | 11, 34 | தொந்தியா பிள்ளை சந்துரு, மவுன்ஸ்புரம, மாலைகட்டி சந்து, ராஜலெட்சுமி நகரில் தார் தளம் அபிவிருத்தி / பேவர் கற்கள் பதிக்கும் பணி | 500.00 | 4.00 | 250.00 | 4.00 | 30.00 |
| | | | **14658.00** | | **11188.00** | | **1000.00** |

**(ரூபாய் ஆயிரம் இலட்சம் மட்டும் )**

(ந.க.எண்.12605 / 2019/ இ4 )

**அலுவலக குறிப்பு...**

1) மாமன்றம் அனுமதிக்கலாம்

2) 14வது மத்திய நிதிக் குழுத் திட்டம் 2019-20 ன் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதிப் பகிர்மானத்தின்படியும் பணிகள் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

3) மேற்கண்ட நிதியில் ஒதுக்கீடு தொகைக்கு மேலே கூடுதலாகும் நிதி செலவினத்தினை மாமன்றப் பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

---

**3.** திண்டுக்கல் மாநகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்காணும் பள்ளிகளில் உள்ள பழுதடைந்த கட்டிடங்களை இடித்து பழைய உபயோகமற்ற

பொருட்களை (உள்ளது உள்ளபடியே) எடுத்துக் கொள்ள ஏலம் விடுவதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1) மேட்டுப்பட்டி மாநகராட்சி தொடக்கப்பள்ளி,
2) மேற்குரத வீதி மாநகராட்சி தொடக்கப் பள்ளி

( ந.க.எண்.11658 / 2019 / இ 4)

<u>அலுவலக குறிப்பு</u>

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

---

**4.** இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எவ்வித உரிமமுமின்றி சிலர் மாடுகளை வளர்த்து பொதுமக்கள் குடியிருக்கும் பகுதிகள் மற்றும் சாலைகளில் பராபரியாய் திரிய விடுவதால் பொது மக்களுக்கும், குழந்தைகளுக்கும் தொற்று நோய்கள் பரவ காரணமாக இருப்பதுடன், மாடுகளால் அடிக்கடி சாலை விபத்துக்கள் ஏற்படுவது குறித்து பொது மக்களிடமிருந்து புகார்கள் மற்றும் நாளிதழ் செய்திகளும் வந்த வண்ணம் உள்ளன. மேலும், மாடுகளின் கழிவுகள் மற்றும் அவற்றிற்கு வைக்கப்படும் தீவனக் கழிவுகளால் பொது மக்களுக்கு நோய்த் தொற்று ஏற்படும் அபாயமும் உள்ளது.

எனவே 13.11.2017ம் தேதிய 886 எண்ணிட்ட இம்மாமன்ற தீமானத்தின்படி மாடுகள் வளப்பவர்கள் மூன்று தினங்களுக்குள் நால்நடை துறையினடமிருந்து மாடுகளுக்கு எவ்வித நோய்த் தொற்றும் இல்லை என தடையின்மைச் சான்று பெறுவதுடன், மேற்படி மாடுகளை இந்நகர எல்லைக்குள் வளக்கும் பட்சத்தில் அவற்றிற்கு சிமெண்ட் கான்கீரிட் தளமும், எளிதில் தீப்பற்றா வண்ணம் மேற்கூரையும் கொண்ட தொழுவம் அமைத்து அதற்கான புகைப்படத்துடன் எழுத்துப்பூர்வமாக அனுமதி கோராத பட்சத்தில், தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுச் சட்டம் மற்றும் பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டங்களின் கீழ் வழக்கு தொடரப்படும் என்றும் மாடு வளப்பவர்களுக்கு அறிவிப்பு சார்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

தவறுபவர்களின் மாடுகளை எவ்வித முன்னரிவிப்பும் இன்றி தனியார்களைக் கொண்டு பிடித்து மாடுகளின் பராமரிப்பு செலவினத்திற்காகவும், இன்னபிற செலவினங்களுக்காகவும் மாடு ஒன்றிற்கு நாள் ஒன்றுக்கு ரூ.200/- வீதம் அபராதம் விதிக்கலாம். அதன் பிறகும் கோருபவர்கள் யாருமில்லாத

**பட்சத்தில் மாடுகளை கோசாலை அல்லது அரசு கொட்டில்களின் உடமையாக்கலாம். இப்பணியினை ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கொள்ள போதிய அவகாசமின்மையால் மாநகராட்சியே தனி நபர்களைக் கொண்டு மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/- ற்கு (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.12860/2019/எச்2)**

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

**மாமன்றம் ஏற்கலாம்.**

---

**5.** இம்மாநகராட்சியில் குடிநீர் நிதி 2019-2020 ன் கீழ் வார்டு எண்.15, சிலுவத்தூர் சாலையில் அமைந்துள்ள சுகாதார வளாகத்தில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கும் பணிக்கு 13.11.2019 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ. எண் | ஒப்பந்தக்காரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.பி.எஸ். ஸ்டாலின் | 4.82% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.3000/- மதிப்புள்ள கருவூல செலான் நகல் |
| 2. | திரு.எஸ். ஜான் போஸ்கோ | 14.00% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.3000/- மதிப்புள்ள கருவூல செலான் நகல் |

(ந.க.எண்.11658 /2019/ இ3)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. ரூ.3,00,000/- மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப்பணிக்கு மாமன்றத் தீர்மான எண். 1726, நாள் 29.11.2019 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட கூடுதலாக வரப் பெற்றுள்ளன. பணியின் அவசர அவசியம் கருதியும், மறு ஒப்பந்தபுள்ளி கோருவதினால் ஏற்படும் காலதாமதத்தைக் கருத்தில் கொண்டும் கூடுதலில் குறைவாக 4.82% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.எஸ். ஸ்டாலின், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தகாரர் திரு.பி.எஸ். ஸ்டாலின், அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
4. கூடுதலாகும் செலவினத் தொகையினை வருவாய் நிதி 2019-20 ன் கீழ் மேற்கொள்ளலாம்.

**6.** இம்மாநகராட்சியில் குடிநீர் நிதி 2019-2020 ன் கீழ் வார்டு எண்.18, தலைமை தபால் நிலையம் அருகில் அமைந்துள்ள சுகாதார வளாகத்தில் புதிய ஆழ்துளைக் கிணறு அமைக்கும் பணிக்கு 13.11.2019 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ. எண் | ஒப்பந்தக்காரின் பெயர் | விலைவிகிதம் | முன்வைப்புத்தொகை |
|---|---|---|---|
| 1. | திரு.பி.எஸ். ஸ்டாலின் | 4.89% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.3000/- மதிப்புள்ள கருவூல செலான் நகல் |
| 2. | திரு.எஸ். ஜான் போஸ்கோ | 15.00% மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.3000/- மதிப்புள்ள கருவூல செலான் நகல் |

(ந.க.எண்.11658 /2019/ இ3)

<u>**அலுவலக குறிப்பு**</u>

1. ரூ.3,00,000/- மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப்பணிக்கு மாமன்றத் தீர்மான எண்.1726 , நாள் 29.11.2019 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
2. முதல் அழைப்பில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட கூடுதலாக வரப் பெற்றுள்ளன. பணியின் அவசர அவசியம் கருதியும், மறு ஒப்பந்தபபுள்ளி கோருவதினால் ஏற்படும் காலதாமதத்தைக் கருத்தில் கொண்டும் கூடுதலில் குறைவாக 4.89% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.எஸ். ஸ்டாலின், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தகாரர் திரு.பி.எஸ். ஸ்டாலின், அவர்களுக்கு வேலை உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.
4. கூடுதலாகும் செலவினத் தொகையினை வருவாய் நிதி 2019-20 ன் கீழ் மேற்கொள்ளலாம்.

---

**7.** திண்டுக்கல் மாநகராட்சிக்குச் சொந்தமான காமராஜர் நீர்த்தேக்க வளாகத்தில் முதல் குடிநீர் திட்டம் மற்றும் இரண்டாம் குடிநீர் திட்டங்களில் உபயோகத்தில் உள்ள 120 HP மற்றும் 7.5 HP மோட்டார் பம்ப் செட்டுகளில் ஏற்பட்டுள்ள பழுதினை சரி செய்தல் மற்றும் பில்டர் பெட் வால்வுகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

( ந.க.எண்.11658 / 2019 / இ 4)

<u>**அலுவலக குறிப்பு**</u> குடிநீர் நிதி 2019-20 ன் கீழ் பணியினை மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

---

8. இம்மாநகராட்சியில் கடந்த ஆண்டுகளில் ஒய்வுபெற்ற / காலஞ்சென்ற பணியாளர்களில் வாரிசுதார்கள் மற்றும் பணியில் உள்ள 1621 பணியாளர்களுக்கு சேம நல நிதி வட்டி தொகை 1985-86 முதல் 1999-20 ஆண்டு வரை கணக்கீடு செய்யப்பட்ட வட்டித் தொகை ரூ.1,17,29,433/- ஆகும். மேற்படி நிதியாண்டுகளில் இம்மாநகராட்சியின் நிதிநிலை பற்றாக்குறையின் காரணத்தினால் இம்மாநகராட்சி பணியாளர்களின் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேம நலநிதி தொகையினை மாவட்ட கருவூலக T-Deposit கணக்கில் மாதா மாத வரவு வைக்கப் பெறாமல், அவ்வப்போது மாநகராட்சியின் நிதி நிலைக்கேற்ப கருவூலக கணக்கு T-Deposit தலைப்பில் வரவாக்கப்பட்டதின் அடிப்படையில் 1985-86 முதல் 1999-20 வரையுள்ள காலங்களுக்கு சேம நல நிதி வட்டி தொகை மொத்தம் ரூ.1,17,29,433/-ல் இயக்குநர், உள்ளாட்சி தணிக்கை துறை, சென்னை அவர்களால் அனுமதிக்கப்பட்ட வட்டி தொகை ரூ.21,06,808/- போக மீதம் உள்ள வட்டி தொகை ரூ.96,22,625/- இம்மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்வதற்கு பதில், தவறுதலாக ரூ.1,16,46,183/- என பதிவு செய்து, ரூ.96,39,375/-க்கு மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டு மாமன்ற தீர்மானம் எண்.1479, நாள் 28.02.2019ல் மாமன்றம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு ரூ.83,250/- குறைவாக மாமன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளதை 2018-19ம் ஆண்டு தணிக்கையின்போது சுட்டிக்காட்டியும், மேற்படி தொகை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மாமன்ற அனுமதி பெற்று தணிக்கைக்கு சமர்ப்பித்திட வேண்டும் எனவும், ஓய்வு பெற்ற பணியாளர்கள், பணியிடை காலஞ்சென்ற பணியாளர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் பணியில் உள்ள சம்பந்தப்பட்ட பணியாளர்களின் சேம நல நிதி கணக்கில் சேர்த்திட வேண்டும் எனவும் அறிவுறுத்தியதற்கிணங்க, விடுபட்ட தொகை ரூ.83,250/- இம்மாநகராட்சியின் (பொது நிதி) வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது (ந.க.எண்.4836/2013/பி6).

அலுவலகக் குறிப்பு

ஒய்வுபெற்ற பணியாளர்கள் காலஞ்சென்ற பணியாளர்களின் வாரிசுதார்கள் தங்களுக்கு, அரசு நிர்ணயிக்கப்பட்ட சேமநல நிதி வட்டி தொகையினை வழங்கிடக் கோரி மனுக்கள் மற்றும் ஒய்வுபெற்ற பணியாளர்களால் தொடரப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்குகள் எண். W.P.15553, 15554, 15555, 15556, 15557, 15558, 15559, 15560 and 15561 of 2013ன் தீர்ப்புரைகளுக்கிணங்க, நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், பணியாளர்களின் நலன் கருதியும், நிர்வாக காரணங்களினால் நிதி பற்றாக்குறை ஏற்பட்ட காரணத்தினால் அரசிடமிருந்து பெறாமல் விடுபட்ட 1985-86 முதல் 1999-2000 வரையிலான காலங்களுக்குரிய வட்டித் தொகை மீதித் தொகை ரூ.83,250/-ஐ மாநகராட்சியின் வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

9. திண்டுக்கல் மாநகராட்சி நகராட்சியாக இருந்தபோது 2012ல் அரசாணை எண்.101 நாள் 30.04.1997ல் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோலின்படி 615 துப்புரவு பணியாளர்கள் தேவையென கணக்கிடப்பட்டிருப்பினும், இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கை 451 ஆகும். இந்நிலையில், மேற்கண்ட 451 பணியிடங்களில் பணியிடை காலஞ்சென்ற மற்றும் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற பணியாளர்களால் ஏற்பட்ட காலிப் பணியிடங்களுக்கேற்ப, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.38498/பி3/2015 நாள் 08.06.2016ன்படி 226 பணியாளர்களை வெளி முகமை மூலம் அயல் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்திக்கொள்ள உத்திரவிடப்பட்டு, துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்கண்ட ஒப்பந்த காலம் செப்டம்பர் 2019 உடன் முடிவடைந்ததன் தொடர்ச்சியாக, அனுமதிக்கப்பட்ட நிரந்தர பணியிடங்கள் 451ல் துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக பொது சுகாதார பணியில் பாதிப்பு ஏற்படாத வண்ணம் தற்போது நிரந்தர பணியில் உள்ள 173 பணியிடங்கள் போக, வெளி முகமை மூலம் அயல் ஒப்பந்த அடிப்படையில் 278 துப்புரவு பணியாளர்களை நியமனம் செய்துகொள்ள அனுமதி வேண்டி பிரேரணைகள் அனுப்பி வைக்கப்பட்டதை தொடர்ந்து, அவ்வாறே மீதமுள்ள 278

பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி அடிப்படையில் வெளி முகமை மூலம் அயல் ஒப்பந்தப்பணி அடிப்படையில் தினக் கூலி பணியாளர்களை பெற்று துப்புரவு பணி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.7139/ஜே-3/2019 நாள் 07.01.2020ன்படி அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட உத்திரவு மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேற்காணும் உத்திரவில் பிரேரணைகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்த தருணத்தில் ஏற்பட்டிருந்த காலிப் பணியிடங்களான 278 பணியிடங்களுக்கு அனுமதி வழங்கியும், அவ்வப்போது ஏற்படும் காலியிடங்களுக்கு தகுந்தாற்போல் அனுமதிக்கப்பட்ட 451 பணியிடங்களுக்கு மிகாமல் தேவைக்கேற்ப இப்பணிக்கு தற்போது அனுமதிக்கப்பட உள்ள ஒப்பந்ததாரர் மூலமாக மட்டுமே கூடுதலாக பணியாளர்களை பணியமர்த்திக்கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி பிரேரணைகள் அனுப்பி வைக்கப்பட்ட காலத்திற்கு பின்பு வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற பணியாளர்களால் ஏற்பட்ட 3 காலிப் பணியிடங்களையும் சேர்த்து தற்போது 281 பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிமர்த்தி பணி மேற்கொள்ளவும், அதற்கான ஒப்பந்தப் புள்ளி கோரவும் மற்றும் விளம்பர கட்டணங்கள் ஆகியவைகளை மேற்கொள்ளவும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், மேற்காணும் உத்திரவில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி விலைப் பட்டியலின்படி பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கிடவும், அதற்கான ESI, EPF, பாதுகாப்பு உபகரணங்கள், சீருடை மற்றும் சேவை கட்டணம் உட்பட மொத்தம் 281 பணியாளர்களுக்கு ஒரு வருடத்திற்கு ஆகும் செலவினம் கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்படுகிறது.

**கணக்கீடு விபரம் (ஓராண்டிற்கு)**

| | | |
|---|---|---|
| 1 | திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்திரவு ந.க. எண். 8698/2019/எப்5 நாள் 27.06.2019ன்படி ஒரு நாள் ஒன்றுக்கு ஒரு நபர் ஒருவருக்கு தினக்கூலி ரூ.509/- வீதம் 281 நபர்களுக்கு 365 நாட்களுக்கு கூலி (281 x509 x365) | **ரூ.**52205585/- |
| 2 | ESI , EPF,சீருடை மற்றும்பாதுகாப்பு உபகரணங்கள் உட்பட | **ரூ.**9676013/- |
| 3 | சேவைக்கட்டணம் 5% | **ரூ.**2610279/- |
| | **மொத்தம்** | **ரூ.**64491877/- |
| 4 | **விளம்பர செலவினம்** | **ரூ.** 500000/- |
| | **பெரு மொத்தம்** | **ரூ.**64991877/- |

மேற்கண்ட செலவினத் தொகையில் ESI , EPF,சீருடை மற்றும்பாதுகாப்பு உபகரணங்கள் ஆகியவற்றிற்கு ஆகும் செலவினங்களை அடுத்து வரும் ஆண்டுகளுக்கு (3 ஆண்டுகளுக்குள்) 10% உயர்வு செய்து கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 3 ஆண்டுகளுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு மாமன்றத்தின் அனுமதியுடன் பணி மேற்கொள்ளவும், இதில் ஆண்டிற்கு (3 ஆண்டுக்குள்ளாக) ஒருமுறை ஒப்பந்த காலத்தினை மாமன்றத்தின் அனுமதி பெற்று நீட்டித்து வழங்கிடவும் உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்காணும் விபரப்படி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையில் கண்டுள்ள அரசாணை எண்.101 நாள் 30.04.1997ல் நிர்ணயிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி 281 பணியாளர்களைக் கொண்டு மொத்தம் 31 வார்டுகளில் வீடு வீடாக சென்று குப்பை சேகரிக்கும் பணியினை மேற்கொள்ளலாம்.

மேலும், தற்போது 3 சிப்பங்களாக பிரித்து மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் கூடுதலாக அனுமதிக்கப்பட்ட 52 பணியாளர்கள் மற்றும் வயது முதிர்வின் காரணமாக பணி ஓய்வு பெற்ற 3 பணியாளர்களையும் சேர்த்து கூடுதலாக பணியமர்த்தப்படும் 55 பணியாளர்களையும் உள்ளடக்கி மொத்தம் 281 தினக்கூலி பணியாளர்களைக்

கொண்டு மாநகரில் உள்ள 48 வார்டுகளில் 31 வார்டுகளை 4 சிப்பங்களாக பிரித்து கீழ்க்கண்ட விபரப்படி ஒப்பந்த பணியாளர்களை பணிமயர்த்திக் கொள்ளலாம்.

| வ. எண். | சிப்பம் எண். | வார்டுகள் | குடியிருப்புகளின் எண்ணிக்கை | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 1 | 5, 6, 13, 14, 18, 19, 29, 30 | 9801 | 87 |
| 2 | 2 | 28, 32, 33, 34, 35, 36, 47, 48 | 11100 | 72 |
| 3 | 3 | 41, 42, 43, 44, 45, 46 | 6850 | 52 |
| 4 | 4 | 21, 22, 23, 24, 25, 37, 38, 39, 40 | 10700 | 70 |

எனவே அனுமதிக்கப்பட்டுள்ள 281 பணியாளர்களுக்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.8698/2019/எப்5 நாள் 27.06.2019ன்படி 2019-20ம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட தினக் கூலியின்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.509/-வீதம் தினக்கூலியும் அதற்கான ESI, EPF, பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் சீருடை செலவினம் மற்றும் சேவைக் கட்டணம் (5%) ஆக மொத்தம் 281 பணியாளர்களுக்கு ஓராண்டிற்கு ஆகும் செலவினம் ரூ.64491877/- மற்றும் விளம்பர கட்டணம் ரூ. 5.00 லட்சம் சேர்த்து ஆகும் உத்தேச செலவினம் ரூ.64991877/-க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

எனவே, மேற்காணும் துப்புரவு பணிக்கு தனியார் மூலம் அயல் ஒப்பந்த அடிப்படையில் தினக்கூலி ஒப்பந்த பணியாளர்களை பணியமர்த்திக் கொள்ள ஒப்பந்தப் புள்ளிகள் பெற்று இப்பணியினை மேற்கொள்ளவும் மேற்கண்ட உத்தேச செலவினம் ரூ.64491877/- (ரூபாய் ஆறு கோடியே நாற்பத்து நான்கு லட்சத்து தொன்னூற்று ஓராயித்து என்னூற்றி எழுபத்தி ஏழு மட்டும்)க்கும் விளம்பர கட்டணம் ரூ. 5.00 லட்சத்திற்கும் அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை ஏற்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண். 8650 /2019/எச்2)

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1. **நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவினை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.**
2. **மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி பணி மேற்கொள்ள தொடரப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.**
3. **மேற்படி செலவினங்களை மாநகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.**

---

**10.** திண்டுக்கல் மாநகராட்சி மைய அலுவலகத்தில் புதியதாக ஏழு வசூல் மையங்கள் அமைக்கப்பட்டு தற்போது வரி வசூல் செய்யப்பட்டு வருகின்றது. தற்போது நிதியாண்டு முடிவடைய மூன்று மாதங்களே உள்ளதால், வரி செலுத்த பொதுமக்கள் அதிகளவில் வருகின்றார்கள். கள்ள நோட்டுகளை கண்டறியும் பொருட்டும், வரி செலுத்த வரும் பொதுமக்களிடம் வரியினை பெற்றுக்கொள்ள ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டும், வரி வசூல் செய்வதை துரிதமாக்கும் பொருட்டும், நவீன பணம் எண்ணும் இயந்திரம் (Counting Mahince) – 5 எண்ணம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.62500/- க்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண்.11658 / 2019 / இ 4)

**<u>அலுவலக குறிப்பு</u>**

பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி பிரிவு.15 ன் கீழ் நவீன பணம் எண்ணும் இயந்திரம் (Counting Mahince) – 5 எண்ணம் வாங்குவதற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

---

**11.** திண்டுக்கல் மாநகராட்சியின் மையப்பகுதியில் அமைந்துள்ள காந்தி மைதானத்தில் நுழைவு வாயில் தினசரி காய்கறி மார்க்கெட் நுழைவு கட்டணம் / உரிமம் வசூல் செய்வது தொடர்பான ஏல உரிமம் இவ்வாண்டு மார்ச் மாதம் 31.03.2020ல் முடிவடைகிறது. எதிர்வரும் 2020-2021, 2021-2022, 2022-2023 மூன்று ஆண்டுகளுக்கு 31.03.2023 வரையில் உரிமம் வழங்க, ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும் முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி மார்க்கெட் புதிய நுழைவு கட்டணம் நிர்ணயம் செய்வது

தொடர்பாக மார்க்கெட்டிற்கு வரும் வாகனம் மற்றும் தலைச்சுமையில் கொண்டுவரப்படும் ஒவ்வொரு மூட்டைகளுக்கும் கட்டணம் நிர்ணயம் செய்வது மற்றும் வாகனங்களுக்கு கட்டணம் நிர்ணயம் செய்து மற்றும் மார்க்கெட் பகுதியில் உள்ள சில்லரை வியாபாரிகளால் நடத்தப்படும் தரைக்கடைகளுக்கு கட்டணம் நிர்ணயம் செய்ய திண்டுக்கல் மாநகராட்சி சட்டப்பிரிவு 378 மற்றும் 379ன் படி கீழ்கண்டவாறு அலுவலர்களை உறுப்பினர்களாக கொண்ட ஒரு குழு அமைத்து பரிந்துரை பெற மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>நிலை குழு உறுப்பினர்கள்</u>**

1. திரு.வி.பெரியசாமி – மாநகர நகரமைப்பு அலுவலர்
2. திரு.ஜி.பாலசந்திரன் – மாநகராட்சி பொறியாளர்
3. திருமதி.டாக்டர் எஸ்.அனிதா – மாநகர் நல அலுவலர்
4. திரு.ஜி.ஆர்.சாரங்க சரவணன் – உதவி வருவாய் அலுவலர்

மேலும் மேற்கண்ட நிலைக்குழு உறுப்பினர்கள் கீழ்கண்ட சூழலை பரிசீலனை செய்து உரிய கட்டண முறை மற்றும் நிபந்தனைகள் பிறப்பிக்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

1. மார்க்கெட் பகுதியில் பொதுமக்கள் அதிகம் வந்து செல்லும் பகுதியாக அமைந்துள்ளது. அதற்காக பராமரிப்பு செலவு அதிகரிக்கும் சூழலில் பரிசீலிக்கப்பட வேண்டும்.
2. மாநகராட்சி பொதுமக்களுக்கு போதிய குடிநீர் வசதி, சாலை வசதி, சுகாதார வசதி, பல்வேறு அபிவிருத்தி திட்டப் பணிகளுக்கு தேவையானநிதி ஆதாரம் தேவைப்படும் சூழலில் இருந்து வருகிறது.
3. சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் காந்தி தினசரி காய்கறி மார்க்கெட் கட்டண முறை தொடர்பாக தீர்ப்புகளின் விபரத்தினை பரிசீலித்து உரிய கட்டண முறையை தீர்மானிக்க வேண்டும்.
4. மார்க்கெட் உட்புறமுள்ள வியாபார பகுதிகளை ஒழுங்குமுறைபடுத்த உரிய கருத்துரு வழங்க வேண்டும்.
5. விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் கட்டண முறை மற்றும் நிபந்தனைகள் பிறப்பிக்க வேண்டும்.

**<u>அலுவலக குறிப்பு</u>**

பதிவு செய்யலாம்.

**12.** திண்டுக்கல் மாநகராட்சிக்குச் சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய முதல் தளத்தில் அமைந்துள்ள தங்கும் விடுதி கட்டிடத்திற்கு 4.28 Kw மின் பளுவுடன் கூடிய மின் இணைப்பு எண். 220-001-141 பெறப்பட்டு உபயோகத்தில் இருந்து வந்தது. தற்பொழுது இம் மாநகராட்சியில் மேற்படி பேருந்து நிலைய தங்கும் விடுதியை 28 எண்ணம் கொண்ட வணிக வளாக கடைகளாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே முதல் தளத்தில் பெறப்பட்டுள்ள மேற்படி மின் இணைப்பை கீழ்தளத்திற்கு மாற்றம் செய்யவும், ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள இணைப்பில் (Sanctioned Load) பெறப்பட்டுள்ள 4.28 Kw மின் பளுவிற்குப் பதிலாக 42.00 Kw மின் பளுவிற்கு மாற்றம் செய்வதற்கு தமிழ்நாடு மின் வாரியத்திற்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.63589/- ஐ செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண். 1501 / 2018/ இ 3)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) வருவாய் நிதி 2019-20 ன் கீழ் ரூ.63589/- ஐ செலுத்த மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**13.** திண்டுக்கல் மாநகராட்சி காமராஜர் பேருந்து நிலையத்தில் சேலம்,கரூர் பேருந்து நிற்குமிடத்தில் அபிவிருத்திப் பணிகளுக்காக மின்கம்பங்கள் மற்றும் மின் இணைப்புகளை இடமாற்றம் செய்வதற்கு உதவி மின் பொறியாளர் பேருந்து நிலைய மின் பிரிவிலிருந்து வரப் பெற்றுள்ள மதிப்பீட்டு கேட்புத்தொகை ரூ.55980/- ஆகும். ஷை கேட்புத் தொகை ரூ.55980/-ஐ உதவி மின் பொறியாளர், பேருந்து நிலைய மின் பிரிவிற்குச் செலுத்த மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (**ந.க.எண். 13055/ 2019/ இ 3)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

**1)** மாமன்றம் அனுமதி வழங்கலாம்.வருவாய் நிதி 2019-20 ன் கீழ் ரூ.55980/-ஐ உதவி மின் பொறியாளர், பேருந்து நிலைய மின் பிரிவிற்குச் செலுத்த மாமன்றம் அனுமதிக்கலாம்.

**2)** பணியின் அவசர அவசியம் கருதி எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**14.** திண்டுக்கல் மாநகராட்சியில் அம்ரூஃட் திட்டத்தின் கீழ் 2017-20ம் நிதியாண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வி.ஓ.சி.நகர், பூங்கா அமைக்கும் பணி மேற்கொள்ப்பட்டு பணி முடிவடைந்து தற்போது பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி பூங்காவில் தண்ணீர் வசதி இல்லாமல் பொது மக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவதால் அப்பூங்காவில் மினி போர்வேல் அமைக்க ரூ.3.00 இலட்சத்தில் மதிப்பீடு தயார் செய்யப்படடு உள்ளது. மதிப்பீடு மற்றும் அதற்கான உத்தேச லெவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.700/2016/இ4 (பா.ச.தி).**

**<u>அலுவலக குறிப்பு:</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம். மேற்கண்ட தொகையினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து பணிமேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**15.** இம்மாநகராட்சியில் வார்டு எண்கள் 1 முதல் 48 வரை உள்ள காலிமனைகளுக்கு காலிமனை வரிவிதிப்பு செய்யப்பட்டு அவ்வப்போது உரிய காலிமனை வரிவிதிப்புகளுக்கு உரிய சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு நிலுவையின்றி நடப்பு காலம் வரை வசூல் செய்யப்பட்டு வருகிறது. காலிமனை வரிவிதிப்புகளுக்கு சொத்துவரி விதிப்பு செய்யப்பட்ட உடன் காலிமனை வரிவிதிப்பு இரத்து செய்யப்பட வேண்டும். மேலும், சொத்துவரி நிர்ணயம் செய்யப்படும் காலம் வரை காலிமனை வரித்தொகையும் வசூல் செய்யப்பட்டுள்ளது. ஆனால், உரிய காலிமனை வரிவிதிப்புகள் உரிய கால அளவுகளில் இரத்து செய்யப்படாமல் தொடர்ச்சியாக கேட்பு எழுப்பப்பட்டு வருகிறது- 48 வார்டுகளிலும் உள்ள கட்டிடங்களான காலிமனை வரிவிதிப்புகளை இரத்து செய்யவும் மேலும் நிலுவை தொகை ரூ.3,27,344/- மற்றும் நடப்பு தொகைகள் ரூ.1,92,894/- மொத்தம் ரூ.5,20,238/-ஐ write off செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது- (ந.க.எண்.12185/2013/அ1)

**அலுவலக குறிப்பு:**

அனுமதிக்கலாம்.

---

**16**.திண்டுக்கல் மாநகராட்சியில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் செயல்படும் பள்ளி சத்துணவு மையங்களில் உள்ள சேதமடைந்து உபயோகமற்ற சமையல் பாத்திரங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் தொடர்பாக 25.09.2019 அன்று பொது ஏலம் நடைபெற்றது. அதில் இரண்டு ஏலதாரர்கள் கலந்து கொண்டு கீழ்க்கண்டவாறு ஏலம் கோரியுள்ளனர் (ந.க.எண். 983/2019 சி5)

1, திரு. நாட்ராயன் ,, ரூ.31200/-
2. திரு. கோவிந்தன் .. ரூ.28700/-

மேற்கண்ட ஏலதாரர்களில் உயர்ந்தபட்ச தொகையாக ரூ.31200/-க்கு ஏலம் கோரிய திரு.நாட்ராயன் என்பவரின் ஏலத்தொகை ஏற்பது குறித்தும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற இரு ஏலதார்களில் உயர்ந்தபட்ச கேள்வித் தொகையான ரூ.31200/-க்கு ஏலம் கோரிய திரு.நாட்ராயன் அவர்களின் ஏலத்தொகையினை ஏற்கலாம்.
3. மேற்படி பழைய பொருட்களை சேமித்து வைக்க இடவசதி இல்லாத நிலையில் ஏலதாரருக்கு அறிவிப்பு வழங்கி பொருட்களை எடுத்துச் செல்ல முன்அனுமதி பெற்று அறிவிப்பு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**17.** திண்டுக்கல் மாநகராட்சியில் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் செயல்படும் பள்ளி சத்துணவு மையங்களுக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாரால் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்ட கோணிப்பைகள் பயன்படுத்தப்பட்டு காலியாக உள்ள கோணிப்பைகளை 25,09,2019 அன்று பொது ஏலம் நடைபெற்றதில் இரண்டு ஏலதாரர்கள் கலந்து கொண்டு கீழ்க்கண்டவாறு ஏலம் கோரியுள்ளனர் (ந.க.எண். 984/2019 சி5)

1, திரு. நாட்ராயன் ,, ரூ.1200/-

2. திரு. கோவிந்தன் .. ரூ.1000/-

மேற்கண்ட ஏலதாரர்களில் உயர்ந்தபட்ச தொகையாக ரூ.1200/-க்கு ஏலம் கோரிய திரு.நாட்ராயன் , என்பவரின் ஏலத்தொகையினை ஏற்பது குறித்தும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற இரு ஏலதார்களில் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வித் தொகையான ரூ.1200/-க்கு ஏலம் கோரிய திரு.நாட்ராயன் அவர்களின் ஏலத்தொகையினை ஏற்கலாம். மேலும் கோணிப்பைகள் அனைத்தும் சேதமடைந்த நிலையில் இருப்பதால் அதனை எடுத்துச் செல்லும் பொருட்டு ஏலதாரருக்கு முன் அனுமதி பெற்று அறிவிப்பு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**18.** திண்டுக்கல் மாநகராட்சிக்கு அலுவலக உபயோகத்திற்கு 2019-20ம் ஆண்டிற்கு தேவையான எழுதுபொருட்கள், படிவங்கள், பதிவேடுகள், கணினி உபகரணங்கள், பல்வகை கணினி ரசீதுகள் மற்றும் பிரிண்டர்கள் முதலியவற்றை வாங்கிக் கொள்ள 2019-20ம் ஆண்டு உத்தேச வரவு செலவு மதிப்பீட்டு அறிக்கையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மீதம் உள்ள தொகையில் ரூ. 15.00 லட்சம் (ரூபாய் பதினைந்து லட்சம்) செலவிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.6828/2019/டி1)

**அலுவலகக் குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

---